Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 178/2019 PW-6**

Name : ரவிக்குமார்
Father / Husband name : பாலகிருஷ்ணன்
Village : கடவம்பாக்கம்
Age : 54
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 21.11.2025

Accused present. Defence counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. அ.சா.1 விஜயக்குமார் என்பவரை எனக்கு தெரியாது. அ.சா.2,அ.சா.3 ஆகியார்களை எனக்கு தெரியாது. சாட்சி முனியம்மாள், அ.சா.4, அ.சா.5 ஆகியோர்களை எனக்கு தெரியும். சாட்சி செல்வி எனது மனைவி. வழக்கின் இறந்துபோன கௌசல்யா என்பவரை எனக்கு தெரியும். கடந்த 2017ம் வருடம் கடவம்பாக்கத்திலிருந்து சிங்கப்பெருமாள்கோவிலுக்கு செல்ல நானும் எனது மனைவி மற்றும் 4, 5 நபர்கள் ட்ரைம் கம்பெனிபேருந்தில் சென்றுகொண்டிருந்தோம். விடியற்காலை சுமார் 04.30 மணியளவில் பேருந்து சலவாதி பேருந்து நிறுத்தம் முன்பாக சென்றபோது கௌசல்யா பேருந்தில் ஏறினார். பேருந்து சென்னைக்கு திரும்புவதற்காக நின்றிருந்தபோது சென்னையிலிருந்து திண்டிவனம் நோக்கி வந்த லாரி நாங்கள் சென்ற பேருந்தின் மீது மோதியது. அதில் எங்கள் பேருந்து அருகிலிருந்த பேருந்து நிறுத்தத்தில் மோதியது. அதில் பேருந்தில் இருந்வர்களுக்கு அடிப்பட்டது. எனக்கு வலது பக்க விலா எலும்பில் அடிப்பட்டது. எனது மனைவிக்கு பின்கழுத்தில் அடிப்பட்டது. பின்னர் அடிப்பட்ட எங்களை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு யாரோ அழைத்துச்சென்றார்கள். விபத்து சம்மந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. கௌசல்யாவிற்கு காயம்பட்டு சென்னைக்கு அழைத்துச்சென்றார்கள். நாங்கள்

சென்ற பேருந்தை ஆஜர் எதிரி சக்திவேல் என்பவர் ஓட்டிவந்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் எந்தயிடத்தில் எவ்வளவு நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தன்று நான் மருத்துவமனையிலிருக்கும்போது விசாரித்தார்கள், பின்னர் 10 நாட்கள் கழித்து விசாரித்தார்கள், சாட்சி பின்னிட்டு மருத்துவமனையில் விசாரித்தபிறகு விசாரிக்கவில்லை என்று சொன்னார். போலிசார் என்னை விசாரித்தபோது நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் சொன்னேன் என்றால் சரிதான், பேருந்து நிறுத்ததில் மோதவில்லையென்றால் நாங்கள் சென்றபேருந்து கவிழ்ந்திருக்கும், லாரி வேகமாக வந்து மோதியது. இந்தவிபத்து சம்மந்தமாக நானும் எனது மனைவியும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 178/2019 PW-7**

Name : செல்வி
Father / Husband name : ரவிக்குமார்
Village : கடவம்பாக்கம்
Age : 44
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 21.11.2025

Accused present. Defence counsel present.

**முதல் விசாரணை**

நான் ட்ரையயன் கம்பெனியில் வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியாது. அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5, சாட்சி முனியம்மாள் ஆகியோர்களை எனக்கு தெரியும், என்னுடன் வேலை செய்பவர்கள். அ.சா.6 ரவிக்குமார் எனது கணவர். வழக்கின் இறந்துபோன கௌசல்யா என்பவரை எனக்கு தெரியும். கடந்த 2017 ம் வருடம் ஒருநாள் விடியற்காலை சுமார் 04.30 மணியளவில் கடவம்பாக்கத்திலிருந்து சலவாதிக்கு கம்பெனி பேருந்தில் சென்றபோது சலவாதிபேருந்து நிறுத்தத்தில் கௌசல்யா பேருந்தில் ஏறினார். பேருந்து சென்னை மார்க்கமாக திரும்பியபோது சென்னையிலிருந்து வந்த லாரி எங்கள் பேருந்தின் மீது மோதியது. அதில் எங்கள் பேருந்து சலவாதி பேருந்து நிறுத்ததின்மீது மோதியது. அதில் எனக்கு பின்னங்கழுத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது கணவருக்கு காலில் அடிப்பட்டது. உடன் வந்தவர்களுக்கும் அடிப்பட்டது. கௌசல்யாவிற்கு அடிப்பட்டு சுயநினைவு இல்லை. பின்னர் போலிசார் வந்து அடிப்பட்ட எங்களை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். விபத்து சம்மந்தமாக யார் புகார் கொடுத்தார் என்று தெரியாது. போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எங்கள் ஊரில் எத்தனை மணிக்கு பேருந்து ஏறினோம் என்றால் காலை 5மணிக்கு. அங்கிருந்து சலவாதிக்கு வர எவ்வளவு நேரம் ஆனது என்றால் சமார் அரை மணிநேரம். கௌசல்யா பேருந்து ஏறிய இடம் சலவாதியிலிருந்து வரும் ரோட்டில் சென்னை செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். கௌசல்யாவை ஏற்றிக்கொண்டு திண்டிவனம் பக்கமாக வாகனம் வருகிறதா என்று பார்த்து பேருந்தை நிறுத்திவைத்திருந்தார் என்றால் சரிதான். அப்போது லாரி வேகமாகவந்து பேருந்தின் மீது மோதி பேருந்து நிறுத்தத்தின் மீது மோதியது என்றால் சரிதான். பேருந்து நிறுத்தம் இல்லையென்றால் பேருந்து கவிழ்ந்திருக்கும் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நின்றிருந்த பேருந்தின் மீது லாரியமோதியதாக சொன்னேன் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணம் லாரியின் ஓட்டுநர் வேகமாகவந்தது தான் என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி -** விபத்து சமயத்தில் நான் பயணம் செய்த பேருந்தின் ஓட்டுநர் யார் என்றால் ஆஜர் எதிரி. லாரியின் ஓட்டுநரை நான் பார்த்தேனா என்றால் இல்லை. லாரியின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**